**கட்டான பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்டான பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் என்பன காசு அடிப்படையில் கணக்கு வைத்தல் சபையின் கணக்கீட்டுக் கொள்கையாக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 10,137,000 தொகை மற்றும் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 98,245,670 தொகை என்பன அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டமையின் காரணமாக மிகை ரூபா 108,382,670 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலைகளுக்காக ரூபா 23,409,835 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 8,823,982 தொகை மாத்திரமே மூலதனமாக்கப்பட்டமையால் ரூபா 14,585,853 தொகை குறைவாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) கிடைக்க வேண்டிய பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை நிதி உதவியின் ஆரம்ப மீதி ரூபா 90,932,432 ஆக தனியான கணக்கொன்றில் காணப்படும் போது மீளாய்வாண்டின் இறுதியில் அந்தக் கணக்குக்கான ஒதுக்கங்கள் ரூபா 10,251,752 தொகை ஏனைய கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட ஒதுக்கீடுகளுக்காக உதவிப் பணம் கிடைக்கும் போது பெறவேண்டிய பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை நிதி உதவிக் கணக்கு செலவு வைப்பதற்குப் பதிலாக ஏனைய கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக அக்கணக்கில் ரூபா 60,969,151 தொகையான செலவு மீதி ஒன்று உருவாகி இருந்ததுடன் அது முன்கொடுப்பனவுக் கணக்கில் ரூபா 200,246 வரவு மீதியுடன் ஈடுசெய்யப்பட்டதன் பின்னர் முன்செலுத்துதல் கணக்கு ரூபா 60,768,905 தொகையான செலவு மீதியாக இறுதிக் கணக்குகளில் குறிப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 கணக்கு விடயங்களின் கணக்குகளின் பிரகாரமான மீதிக்கும் அத்திகதியில் உள்ள பதிவேடுகள் / பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 38,847,043 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் கணக்குகளின் பிரகாரம் வருமானம் மற்றும் அத் திகதியில் உள்ளவாறு உபயோகப் பதிவேடுகளின் பிரகாரமான வருமானம் என்பவற்றுக்கிடையே 03 விடயங்களில் வேறுபாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 50,900,037 ஆகும்.

**1.3.3 தொங்கல் கணக்கு**

தொங்கல் கணக்கில் ரூபா 18,730 தொகையான வரவு மீதி பலவருட காலமாக முன்கொண்டு வரப்பட்ட போதிலும் அதனை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | |
| (i) விதி 5(7) | நிதி மற்றும் களஞ்சிய கொடுக்கல் வாங்கல் தொடர்பாக போதியளவான முறையில் உள்ளகக் கணக்காய்வு திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 202 | ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நுகர்வுப் பொருட்கள் பதிவேடு மற்றும் இருப்புப் புத்தகம் என்பன சமப்படுத்தப்பட்டு மீதி புதிய ஆண்டிற்காக முன்கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி 213 | செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு விநியோகித்தல் கட்டளைகள் இன்றி எந்த ஒரு பொருளும் விநியோகிக்கப்பட்ட முடியாதிருந்த போதிலும் அதற்கு முரணாக விநியோகித்தல் கட்டளை எந்த ஒரு செயலாளரினாலும் கையொப்பமிடப்படாதிருந்ததுடன் அந்தப் பொருட்கள் கையேற்கப்பட்டமைக்கும் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2016 மே 25 ஆந் திகதிய எல்ஜீடீ/05/2016 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | பிரதேச சபையினால் 2007 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ஆதன மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டு வரையிலும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 114,308,008 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 82,122,028 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| வீதவரியும் வரியும் | 34,469 | 35,336 | 34,314 | 30,054 | 50,286 | 38,634 | 39,976 | 30,353 |
| வாடகை | 1,593 | 1,022 | 1,045 | 8 | 952 | 1,013 | 902 | 36 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 980 | 1,187 | 1,187 | - | 865 | 1,157 | 1,161 | - |
| ஏனைய வருமானம் | 190,026 | 179,686 | 71,298 | 14 | 6,869 | 12,477 | 112,678 | 14 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 11,559,675 தொகையே சேகரிக்கப்பட்டமையால் நிலுவை அறவிடல் 38 சதவீதமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட அனுமதிப்பத்திர வருமானத்தை விட சிட்டையிடல் 21 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையால் மதிப்பீடு செய்தல் சாத்தியமான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ஏனைய வருமானத்தில் 37 சதவீதம் மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டின் போது பிரதேச சபை அதிகாரஎல்லையில் அமைந்துள்ள கிராமம் மற்றும் 07 வீதிகளுக்குரிய ஆதனவரி அலகுகள் தவறவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு வரையிலும் அந்த அலகுகளுக்காக ஆதனவரி அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச சபையில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 7,272,988 ஆக இருந்தது. இந்த நிலுவையை அறவிடுவதற்கோ அல்லது சொத்துக்களை தடை செய்வதற்கோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டான, ஆடிஅம்பலம, ரத்தொழுவ மற்றும் தெமன்ஹந்திய என்ற உப அலுவலகங்களில் காணப்பட்ட நிலுவை ஆதனவரியில் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்ட சதவீதம் முறையே 7.8 சதவீதம், 10.9 சதவீதம், 15.6 சதவீதம் மற்றும் 12.5 சதவீதமாக இருந்தன.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 30,054,061 தொகையான ஆதனவரி நிலுவையில் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அறவிட வேண்டி இருந்த ஆதனவரி நிலுவை ரூபா 26,771,337 ஆக இருந்த போதிலும் ஆதனங்களை தடை செய்யும் கட்டளை ரூபா 2,185,802 தொகையான 580 ஆதனங்களுக்காக மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது.

(உ) ரத்தொழுவ உப அலுவலகத்திற்குரிய 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 6,065,988 தொகையான ஆதனவரி நிலுவையில் 2018 மார்ச் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டிய ரூபா 4,163,794 தொகைக்காக சிவப்பு அறிவித்தல் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்களிலிருந்து முன்னைய ஆண்டின் மொத்தப் புரள்வில் 1 சதவீதத்தை விஞ்சாத அனுமதிப்பத்திரக் கட்டணம் ஒன்று அறவிட வேண்டியிருந்த போதிலும் ஆடிஅம்பலம உப அலுவலகப் பிரதேசத்தில் உள்ள டெமரின்ட் ட்ரீ ஹோட்டலில் இருந்து இதுவரை எந்த ஒரு அனுமதிப்பத்திரக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

-----------------------------------------------------------

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தியிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------

(அ) 2001 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்துவதில் உள்ள தாமதத்தின் காரணமாக 2017 மே 18 ஆந் திகதிய L33/854 ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின் மூலம் ரூபா 317,792 மிகைக் கட்டணமொன்று செலுத்துவதற்கு சபைக்கு ஏற்பட்டிருந்தது இந்தத் தாமதத்திற்கு காரணமாக மூன்று உத்தியோகத்தர்கள் ஒருவர் நட்டத்தைத் தீர்ப்பதற்கு புறக்கணித்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 275,874 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) விலசிங்ஹ ஹரிச்சந்திரா கிரிகெட் விளையாட்டு மைதானம் அமைந்துள்ள காணி 2002 நவம்பர் 01 ஆந் திகதி கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கம்பஹா மாவட்ட சங்கத்திற்கு 30 வருடங்களுக்காக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வாடிக்கையாளரால் வாடகை உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமை, விளையாட்டரங்கை போட்டி நிகழச்சிகளுக்காக வழங்குவதன் மூலம் பெறப்படுகின்ற பணத்தில் சபைக்குக் கிடைக்க வேண்டிய பகுதி செலுத்தப்படாமை, உப வாடகைக்கு வழங்குதல் மற்றும் காசாக செலுத்தப்பட்ட ரூபா 180,000 தொகை ஒன்று மாத்திரம் கிடைக்கப்பெற்றமையின் அடிப்படையில் 2007 ஒக்தோபர் 27 ஆந் திகதி உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. எனினும், உரிய விளையாட்டுச் சங்கத்தினால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்ட திகதி முதல் 10 வருடங்களுக்கு அண்மித்த காலமாக சபைக்கு எந்த ஒரு தொகையும் செலுத்தாது தமது நடவடிக்கைகளை செய்து கொண்டு இருந்ததுடன் அதற்கு எதிராக சபை எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. மேலும் 5.5840 ஹெக்டேயர் அளவான விளையாட்டு மைதானத்துடன் மொத்தக் காணியில் அளவான 8.8527 ஹெக்டேயர் 2002 ஆம் ஆண்டு முதல் 2018 யூலை மாதம் வரையிலும் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளும் செய்யப்படாதிருந்ததுடன் சபைக்கு கணிசமான வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------

(அ) கந்தவல ஐவன் சில்வா மாவத்தையில் அமைந்துள்ள சபீடியாவத்த தனியார் காணியொன்றில் ஒரு ஏக்கர் அளவான நில அளவில் பிரதேச வாசிகளின் நலன்களுக்காக குளமொன்றை நிர்மாணித்து தருமாறு சபையின் தலைவரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் 270 அடி நீளமும் 103 அடி அகலமும் 20 அடி ஆழமுமான தடாகமொன்றை நிர்மாணிப்பதற்கு காணியின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அகற்றப்பட்ட மண் மற்றும் சேறுகள் சபீடியாவத்த சதுப்பு நிலத்தை நிரப்புவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையினதும், நகர அபிவிருத்தி அதிகார சபையினதும், இலங்கை நிலமீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினதும் சிபாரிசு மற்றும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அதனால் பிரதேசம் அதிக வெள்ளநீர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றமையால் பிரதேச வாசிகள் தமது எதிர்ப்பினை பிரதேச சபைக்கு சமர்ப்பித்திருந்ததுடன் நீர் நிரம்பியுள்ள குழியுடன் ஒரு ஏக்கர் அளவான நிலம் 2012 மே 10 ஆந் திகதி உரித்துறுதி மூலம் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2018 யூன் 11 ஆந் திகதிய களப் பரிசோதனை வரையில் தடாகத்தைச் சுற்றி பிரதேச சபையினால் கம்பி வேலி அடித்திருந்ததுடன் தடாகம் உள்ள காணி சபைக்கு கையேற்று 06 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்த

போதிலும், அதனை பிரதேச வாசிகளின் நலன்களுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 ஏக்கர் 03 றூட் 17 ½ பேர்ச் அளவான கந்தவல ஐவன் சில்வா மாவத்தையில் சபீடியாவத்த காணியை கூறிட்டு விற்பனை செய்வதற்கு அதன் உரிமையாளரினால் 2015 மே 03 ஆந் திகதி நிலக் கூறிடல் திட்டம் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக அங்கீகாரம் வழங்காதிருக்கும் போது, காணிக் கூறுகள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவாளர்களால் வீடுகள் நிர்மாணித்து குடியிருந்து வருகின்றனர். நிலக் கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்படாதிருந்த போதிலும், பொதுக் காணி மற்றும் வீதிகள் உரித்துறுதி மூலம், சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகாரமின்றி காணிக் கூறுகளை விற்பனை செய்தல் மற்றும் விற்பனைப் பெறுமதியில் 1 சதவீத வரித்தொகை சபைக்கு செலுத்தாமை தொடர்பாக காணி உரிமையாளருக்கு எதிராக சபையினால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

(அ) ரத்தொழுவ உப அலுவலகத்திற்குரிய உதம்மிட்ட பல்நோக்குக்கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த உடற்பயிற்சி நிலையத்திற்காக, மேல்மாகாண, விளையாட்டுத் துறை அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட leg pull down உடற்பயிற்சி இயந்திரத்தின் பௌதீக இருப்பு வருடாந்த பொருள் மெய்மையாய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 மார்ச் 30 ஆந் திகதிய செயலாளரின் கடிதத்தின் பிரகாரம், பொருள் மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரையின் பிரகாரம் ஏலமிடப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதியை மதிப்பீடுசெய்து கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) உதம்மிட்ட பல்நோக்குக் கட்டிடத்திற்காக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 252 எண்ணிக்கையிலான பொருட்கள் மற்றும் 09 வகை உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி காண்பிக்கப்படாதிருந்த 24 எண்ணிக்கையிலான பொருட்களில் 17 வகைகள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 இருப்புக் கட்டுப்பாடு

(அ) எரிபொருள் இருப்பைக் கணிப்பிடுவதற்கான முறைமையொன்று பயன்படுத்தப்படாதிருந்தமையால் வருடாந்த இருப்பு மெய்மையாய்வை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் பதிவேடுகளிலுள்ள மீதிகள் மாத்திரம் கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) பொருட்களை விநியோகித்தல், களஞ்சிய பொருட் பதிவேடுகளில் உள்ளடக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் எட்டம்பகஹவத்த புதிய மக்கள் குடியிருப்பு வீதியை திருத்தி அமைப்பதற்காக 2017 செப்தெம்பர் 22 ஆந் திகதி ரூபா 509,236 தொகையான பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அவை பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முதலாவது தடவை தார் இட்ட திகதி முதல் இரண்டாவது தடவை தார் இடுவதற்காக காலமொன்று எடுக்கப்பட்டிருந்த போதிலும் விநியோகிக்கும் போது முதலாவது தடவை மற்றும் இரண்டாவது தடவை தார் இடுவதற்காக ஒரு தடவையில் மொத்த அளவும் விநியோகிக்கப்பட்டிருந்தது.

**3.5 பெறுகைகள்**

-------------------

**ஒப்பந்த நிர்வாகம்**

------------------------------

(அ) 2017 இன் முழு ஆண்டிற்கும் 14 சமப்படுத்தல் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 2016 திசெம்பர் 21 ஆந் திகதி 09 வழங்குனர்கள் பதிவு செய்திருந்ததுடன் அதனிடையே 07 பேரினால் 4'x4' கருங்கல் மற்றும் மணல் மாத்திரம் எனக் குறிப்பிடப்பட்டிருந்த கூறுவிலைகளில் வழங்க முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டமையால் 4'x4' கருங்கல் மற்றும் மணலுக்காக மாத்திரம் மீண்டும் கூறுவிலை கோராமல் 14 பொருட்களுக்காகவும் 2017 ஏப்ரல் 11 ஆந் திகதி மீண்டும் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. இதன்போது 05 சமப்படுத்தல் பொருட்களின் விலைகள் அதிகரித்தமையால் அந்த 05 பொருட்களையும் கொள்வனவு செய்யும் போது அதிக விலை செலுத்துவதற்கு ஏற்பட்டமையால் சபைக்கு ரூபா 644,815 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) மடவல சனசமூக மண்டப நிர்மாணத்தின் 1 ஆவது கூட்டத்திற்காக ரூபா 1,493,589 பெறுமதியில் 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு 2016 திசெம்பர் 23 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. சபையினால் ஒப்பந்தம் கைவிடப்பட்டதாக ஆலோசனை வழங்கப்படாதிருந்த போதிலும், ஒப்பந்தகாரர் தொடர்பாக எதிர்கால நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அறம்ப பிரதான வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,694,750 பெறுமதியில் இரண்டு வாரங்களில் பூர்த்தி செய்வதற்காக 2017 நவம்பர் 27 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், 2018 யூன் 30 ஆந் திகதியளவில் இந்த செயற்திட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்படாதிருந்த போதிலும் ஒப்பந்தக்காரர் தொடர்பான எதிர்கால நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தொழிற்தகைமை பயிற்சி நிலையத்திற்கு அருகில் சிகிச்சை நிலையம் மற்றும் சனசமூக மண்டபத்தை நிர்மாணிக்கும் இரண்டாவது கட்டத்திற்காக ரூபா 2,480,432 பெறுமதியில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி 3 ½ மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் பணிகளை நிறைவேற்றுவதற்கு 5 ½ மாதங்கள் கடந்திருந்த போதிலும், அதற்காக தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மூன்றாவது கட்டத்திற்காக கமநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 5,000,000 தொகை 2014 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் போதே வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இதன் நான்காவது கட்டத்திற்காக ரூபா 1,965,945 பெறுமதியில் 2016 திசெம்பர் 23 ஆந் திகதி மூன்று மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தை கைவிடுவதாக சபை ஆலோசனை வழங்கப்படாதிருக்கும் போதும் ஒப்பந்தங்கள் தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் 5 ஆவது கட்டத்திற்காகவும் அந்த ஒப்பந்தக்காரருடன் ரூபா 1,485,000 பெறுமதியில் 2017 ஒக்டோபர் 03 ஆந் திகதி 03 மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் 2018 யூன் 30

ஆந்திகதி வரையிலும் அந்த பணிகளையும் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரர் தவறியிருந்தார்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | நிலுவை ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) | கணக்கீடு | மீதிகளில் வேறுபாடுகள் காணப்பட்டமை மற்றும் தொங்கல் கணக்கை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) | பெறுகைகள் | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படாமை |
| (ஈ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | சில சொத்துக்கள் மெய்மையாய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை |